

ராஜம் பிக்சர்ஸ் அளிக்கும்
எம்.ஏ.வி. பிக்சர்ஸ்...
பாஞ்சாலி
டைரக்ஷன்
V. ஸ்ரீனிவாசன்
BHARATH STUDIO
தயாரிப்பு M.A. தியாகராஜன் & சகோதரர்கள்
ஸ்டுடியோ :- ரத்னா (சேலம்)

## சிருஷ்டி கர்த்தாக்கள்

| | |
|---|---|
| கதை, வசனம் | நாகசண்முகம் |
| பாடல்கள் | A. மருதகாசி |
| | கு. சா. கிருஷ்ணமூர்த்தி |
| சங்கீதம் | K. V. மகாதேவன் |
| ஒளிப்பதிவு | K. ராமச்சந்திரன் |
| ஒலிப்பதிவு | P. கோவிந்தன்நாயர் |
| பாடல்கள் ஒளிப்பதிவு | T. S. ரங்கசாமி (பாரமவுண்ட் ஸ்டுடியோ) |
| எடிட்டிங் | V. ராஜகோபால் |
| மேக்கப் | K. R. ராகவ் |
| ஆடை அலங்காரம் | T. A. மாதவன் |
| ஆர்ட் & செட்டிங்ஸ் | M. P. குட்டி அப்பு |
| சீப் எலக்ட்ரீஷியன் | V. கிருஷ்ணன் |
| நடனம் | M சம்பத்குமார் |
| | சின்னிலால் |
| ஸ்டில்ஸ் | V. A. ஜான் |
| புரொடக்ஷன் | M. A. ராதா |
| ஆபீஸ் நிர்வாகம் | M. A. சுந்தரேசன் |

டைரக்ஷன் :

**V. சீனிவாசன்**

தயாரிப்பு:

**M. A. தியாகராஜன்**
**&**
**சகோதரர்கள்**

**இப்படத்தின் கதை, வசனம், பாடல்கள் அனைத்தும் ராஜம் பிக்சர்ஸாருக்கே உரித்தானது**

# பாஞ்சாலி

## கதைச்சுருக்கம்

பொன்னருவிக் கிராமத்தில் நடந்த பஞ்சாயத்துத் தேர்தலில் நாட்டுவைத்தியர் நடராஜபிள்ளை வெற்றிபெறுகின்றார் அதற்கு முன் இருமுறை வெற்றிபெற்ற கல்யாணி அம்மாள் மகன் ஆனந்தன் தோல்வி அடைகிறான். இதனால் நாட்டுவைத்தியர் தன் குடும்பத்திற்கு மிக வேண்டியவராக இருந்தும் அவர்மீது ஆனந்தன் ஆத்திரமடைகிறான்.

இளமையிலே கணவனை இழந்த கல்யாணி அம்மாள் ஆனந்தன், கோமதி என்ற தன் இரு செல்வங்களையும், பெற்றோர்களை இழந்த தன் தம்பி மகன் ராகவனையும் வளர்த்து ஆளாக்குகிறாள்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் டாக்டர் பட்டம் பெற்றுத் திரும்பிய ராகவன் கிராம சேவை செய்யவேண்டும் என்ற நல்ல எண்ணத்தால் பொன்னருவிக் கிராமத்திலேயே தன் தொழிலைத் தொடங்கி ஏழை எளியவர்களிடம் காட்டிய அன்பாலும் திறமையான வைத்தியத்தாலும் விரைவிலேயே பெரும்புகழ் அடைகிறான்.

ராகவன் தன் மகள் கோமதியைச் சகோதரியாகக் கருதி வருகிறான் என்பதை அறியாத கல்யாணி அம்மாள் அவனுக்கே கோமதியைத் திருமணம் செய்துவைத்துவிட எண்ணுகிறாள்.

ஆனால் நாட்டு வைத்தியர் நடராஜபிள்ளை மகள் பாஞ்சாலியை ராகவன் ஒரு நாள் எதிர்பாராது சந்தித்தபோது அவர்களிடையே அன்பு மலருகிறது. இதையறிந்த வைத்தியர் தன் மகளைக் கண்டித்ததோடு ராகவனிடமும் இவ்வாறெல்லாம் நடக்கக் கூடாது என்று எச்சரிக்கை செய்து வைக்கிறார்.

நாளடைவில், ஆனந்தன் அநியாயங்கள் பல செய்யும் அக்கிரமக்காரனாக வாழ்கிறான் என்பதை அறிந்த ராகவன் தன் அத்தை கல்யாணி அம்மாளிடம் இதைப்பற்றிக் கூறுகிறான். இதை அறிந்த ஆனந்தன் ராகவன்மீது ஆத்திரம் கொள்கிறான். ராகவன் வைத்தியர் மகளைக் காதலிக்கிறான்; தன் தங்கையை மணக்க மறுக்கிறான் என்பதை அறிந்ததும் ஆனந்தன் ஆத்திரம் பன்மடங்காகப் பெருகுகின்றது. இதனால் ராகவன் மீது பல பழிகளைச் சுமத்துகிறான், அவனை ஒழித்துக் கட்டவும் முடிவு செய்கிறான்.

# 3

ஆனந்தன் தன்னுடைய ரகசிய நடவடிக்கைகளுக்குக் கேந்திர நிலையமாக மலையில் உள்ள சந்தன பங்களாவைப் பயன் படுத்தி வருகிறான் என்பதை அறிந்த ராகவன் வைத்திய சேவை செய்வதே தன் லட்சியம் என்றாலும் பொன்னருவிக் கிராமத்திற்கே பெரு நோயாக முளைத்து விட்ட ஆனந்தன் கொட்டத்தை அடக்கு வதுதான் தன் முதற்கடமை என்ற முடிவிற்கு வருகிறான். அதனால் ஊமையனைப்போல் உருமாறி ஆனந்தனிடமே வேலைக்காரனாகச் சேர்ந்து சந்தன பங்களாவில் உள்ள ரகசியங்களை அறியும் முயற்சியில் ஈடுபடுகிறான். அதோடு அங்கு ஆனந்தன் கொடுமை களுக்கு இலக்கானவர்களையும் காப்பாற்றுகிறான்.

உண்மையறியாத ஊர்மக்கள் டாக்டர் ஊரைவிட்டே ஓடி விட்டான் என்று தூற்றுகிறார்கள்.

இந்த நிலையில் யாரும் எதிர்பாராத வகையில் ஆனந்தன் கையாட்களோடு சென்று நாட்டு வைத்தியர் நடராஜ பிள்ளையை அடித்துப் போட்டுவிட்டுப் பாஞ்சாலியைச் சந்தன பங்களாவிற்குத் தூக்கி வந்துவிடுகிறான். அவள் வாழ்வைக் குலைக்கவும் முயல்கிறான்.

ஆனந்தன் கொட்டத்தை அடக்குவேன் என்ற திட்டத் தோடு ஊமையனாக உருமாறிச் சென்ற ராகவன் தன் திட்டத்தில் வெற்றி பெற்றானா?

உள்ளம் விரும்பியவனையே மணந்து உல்லாசமாக வாழ வேண்டும் என்ற பாஞ்சாலியின் எண்ணம் நிறைவேறியதா?

அத்தான் நெறி தவறாதவர் என்ற திடமான நம்பிக்கை யோடு அதர்மவழியில் சென்ற தன் அண்ணனையே எதிர்த்த கோமதி என்ன ஆனாள்?

**இந்த வினாக்களுக்கு விடைகளை** வெண்திரையில் காணுங்கள்.

# பாஞ்சாலி
## பாடல்கள்

---

இயற்றியவர்
கு. மருதகாசி

பாடியவர்கள்
சீர்காழி கோவிந்தராஜன்
S. C. கிருஷ்ணன்
ராஜேஸ்வரி

கோரஸ் : மா மணக்குது தேன் மணக்குது
மலை அருவிக் கரையிலே
பூ மணக்குது பொன் கொழிக்குது
பொங்கி வரும் நுரையிலே
தந்தனத் தன்னு தய்யத்தா தந்தனத் தன்னு

ஆண் : கனியெடுத்து வானரங்கள்
மந்தி கையில் கொடுக்கும் — மந்தி

பெண் : கடித்துத் தின்ற மீதிக் கனியைத்
தின்பதற்குத் துடிக்கும்
மனிதரைப் போல் அவைகளுமே
ஜாடை செய்து நடக்கும் — இந்த

பெண்கள் : மனங் கவரும் காட்சி இன்பம்
வேறு எங்கு கிடைக்கும்

கோரஸ் : தந்தனத் தன்னு தய்யத்தா தத்தனத் தன்னு !
தந்தனத் தன்னு தய்யத்தா தானே தன்னு !
(மாமணக்குது)

ஆண்கள் : சதிராடும் பெண்களைப் போல்
தங்கச் சம்பா தோணுது
கதிரறுத்து அடிக்கும் போது
கட்டுக் கலம் காணுது

பெண் : புதிதாக வந்த் சட்டம்
அறுபது நாப்பது

ஆண்கள் : பூமியிலே ஒழைச்சவங்க
கஷ்டங்களை போக்குது

கோரஸ் : தத்தனத் தனுன்னு தய்யத்தா தந்தன தன்னுனு !
தந்தனத் தன்னுனு தய்யத்தா தானே தன்னுனு !

ராகவன் : பளிங்கு போன்ற நீரைப்போல
மனமும் இருக்கணும்
பாயும் கவரி மானைப் போல
மானம் காக்கணும்
பண்பும், அன்பும், அறமும்
கொண்டு சேவை செய்யணும்
ஒன்றுபட்டு மக்களெல்லாம்
உயர்ந்து வாழணும்

கோரஸ் : தந்தனத் தன்னுனு தய்யத்தா தந்தனத் தன்னுனு !
தந்தனத் தன்னுனு தய்யத்தா தானே தன்னுனு !

—*—

இயற்றியவர் : கு. சா. கிருஷ்ணமூர்த்தி பாடியவர் : P. சுசீலா

அன்பு உள்ளம் வேணும்
அறிவை வளர்க்க வேணும்
இன்பம் சேர்க்கும் கல்வியால்—பெண்கள்
ஏற்றம் காண வேணும்—என்றும் (அன்பு)

பண்பு நிறைய வேணும்—நல்ல
பழக்க வழக்கம் வேணும்
வம்பும் வழக்கும் நீங்கி — உலகில்
வாழத் தெரியணும் — அதற்கும் (அன்பு)

பொறுமையின் உருவே பெண்மை — உள்ளம்
புதுமலர் போலே மென்மை — நம்

திறமையினாலே நன்மை — பல
செய்திடுவோம் இது உண்மை
கற்புத் தெய்வம் கண்ணகி — வழி
காட்டும் தெய்வம் வாசுகி
அற்புத ஞானக் கல்வித் தெய்வம்
ஔவை மூதாட்டி போலே — வாழ்வில் (அன்பு

—※—

இயற்றியவர் : A. மருதகாசி பாடியவர் : ஜமுனாராணி

அந்தி நேரம்
ஆத்தங்கரை ஓரம்
ஆனைக்காக நான் கண்ணியும் வைச்சேன்
அந்தக் கண்ணியிலேதான் ஒரு ஆளும்
வந்து விழவுங் கண்டேன் (அந்தி)

அருகில் ஓடிச் சென்றேன்
அத்தானைக்கண்டேன் — நெஞ்சம்
பித்தாகி நின்றேன்! — எந்தன்
சொத்தாகக் கொண்டேன்
என் கண் அம்பை நான் வீசி
செங்கரும்பான மொழி பேசி
சந்தோஷம் கொண்டாடும்போது
அவர் தாளம் போட்டுப் பாடக் கண்டேன் (அந்தி)

உனது வாழ்வில் இன்பம்
என்னாலே பொங்கும் — அடி
என்னைச் தங்கம் — என்று
சொன்னாரே சிங்கம்
அவர் சொல்லாலே மகிழ்ந்தேனே
நான் வில்லாக வளைந்தேனே!
எல்லாமே என் எண்ணம் போலே — இனி
ஆகும் என்றே ஆடுகின்றேனே (அந்தி)

இயற்றியவர் : A. மருதகாசி  பாடியவர் : A. L. ராகவன்

ஒரு முறை பார்த்தாலே போதும் — உன்
உருவம் மனதை விட்டு நீங்காது எப்போதும் (ஒரு)

கருவிழிப் பார்வையில் மின்னல் வந்தாடும்
கற்பனைக் கெட்டாத அற்புதக் கவிபாடும்
கனியிதழ் வாய்ச் சொல்லில் இனிமை வழிந்தோடும்
கலையழகே! உன்னை வாழ்நாளில் (ஒரு)

கன்னங்களை ரோஜா மலர் என்பதா — இல்லை
கண்ணாடி என்றே நான் வர்ணிப்பதா?
கண்களை மீனென்று சொல்வதா? — இல்லை
கடலுக்கு உவமையாய்க் கொள்வதா (ஒரு)

மாந்தளிரைக் காணும்போது — உன்
வண்ணமேனி அதில் காணுதே!
பூங்குயிலே! உன்னை எண்ணும் போதே
ஒரு புதிய உலகமும் தோணுதே (ஒரு)

—*—

இயற்றியவர் :
கு. சா. கிருஷ்ணமூர்த்தி

பாடியவர்கள் :
S. C. கிருஷ்ணன்
திருச்சி லோகநாதன்

புலியண்ணன் : நம்ம நாட்டு வைத்தியத்தை
லேசா எண்ணாதே
நன்மையெல்லாம் புரிஞ்சுக்காமெ
அலட்சியம் பண்ணாதே
சும்மா கெடக்கும் காட்டு வேரும்
மூலிகையும் கொண்டு
சுக்கு மிளகு திப்பிலிக் காயம் சீனி
கற்கண்டு — சேர்த்து
செம்மையாகப் பக்குவம் செய்த

லேகியம் இதை உண்டு — பல
சீக்கையும் குணமாக்கலாம் இதில்
அனுபவம் எனக்குண்டு (நம் நாட்டு)

பொம்மண்ணன்: இங்கிலீசு வைத்தியத்தை
எளிசாய் எண்ணுதே!
சங்கதியெல்லாம் தெரிஞ்சுக்காமெ
அலட்சியம் பண்ணுதே!
அங்கத்தைப் பிளந்து நோயைக்
களைந்து அப்புறப்படுத்திப் போடுரூர்
அரை நெடியில் உறுப்பை பிரித்து
தையல் போட்டு மூடுரூர்
விஞ்ஞானக் கலை வளர்ச்சியினுல்
விளைந்ததெனக் கொண்டாடுரூர்—அந்த
வித்தையிலே எங்க எஜமான் புத்திசாலியாம்
(இங்கிலீசு வைத்தியத்தை)

புலியண்ணன்: வீரம் பூரம் செந்தூரம் — இதனுல்
விளையும் பலன்தான் அபாரம் — இந்த
வித்தையிலே எங்க எஜமான் — பழைய
சித்தர்களைப் போலவந்த அவதாரம்

இருவரும்: ஆமாம்!
எந்த நாட்டு வைத்தியமும்
கொறையே ஆகாது
எதையுந் தெரிஞ்சுக்காமே
முடிவு பண்ணக்கூடாது

—✱—

இயற்றியவர்:
A. மருதகாசி

பாடியவர்கள்:
ஜமுனுராணி
P. சுசீலா

கோமதி: இலவு காத்த கிளி தானே? — நான் (இலவு)
எனது வாழ்வில் இந்த ஏமாற்றம் ஏனே (இலவு)
எண்ணமெல்லாம் பகல் கனவு ஆனதே!
இதுவரை நான் கொண்ட ஆனந்தம் போனதே

பாஞ்சாலி : கிளையினிலே கொடி படரும் போதிலே
வளர்த்தவரே அதைப் படராமல் செய்வதா (இலவு)

கோமதி : இசைப்பதெல்லாம் இனித் துன்ப கீதமே!
எழுதுவதும் ஏதினி மெய்யின்ப நாதமே!

பாஞ்சாலி : என் இதயம் சுமை தாங்கி ஆவதா
ஏக்கத்துடன் தினம் போராடிச் சாவதா!
இலவு காத்த கிளிதானோ ?

கோமதி : எனது வாழ்வில் இந்த ஏமாற்றம் ஏனோ
இலவு காத்த கிளிதானோ

— ❋ —

இயற்றியவர் : A. மருதகாசி பாடியவர் : ஜமுனாராணி

இல்லாத பழக்கம் — இது
இல்லாத பழக்கம்
இன்பத் தமிழ் நாட்டினிலே
எங்களது ஏட்டினிலே (இல்லாத)

பல்லைக் காட்டி ஆண்களெல்லாம் பார்க்கும்போது
பகட்டியும் குலுக்கியும் பெண்கள் ஆடுவதும்
காசு பணம் தேடுவதும்
காதல் பாட்டுப் பாடுவதும்
இன்பத் தமிழ் நாட்டினிலே
எங்கள் தமிழ் நர்ட்டினிலே (இல்லாத)

மானமுள்ள பெண்கள் மனம் மறுக்கும் போது
வம்புகள் செய்வதும் வாழ்வைக் கெடுப்பதும்
பண்பாட்டைக் கொல்லுவதும் பாதை மாறி செல்லுவதும்
இன்பத் தமிழ் நாட்டினிலே
எங்களது ஏட்டினிலே
இல்லாத பழக்கம் — இது
பொல்லாத பழக்கம்

— ❋ —

# 10

இயற்றியவர் :
A. மருதகாசி

பாடியவர்கள் :
A. L. ராகவன்
ஜமுனாராணி

ராகவன் : அழகு விளையாட அமைதி உறவாட
அருவி இசைபாட அழைத்திடுதே

பாஞ்சாலி : அசையும் கொடியொன்று
குறும்புத்தனம் கொண்டு
ஆட்டமும் காட்டி மறைத்திடுதே (அழகு)

ராகவன் : நிழல் போலக் கூடவே — வரும்
விழிகள் ஏமாறுமா?
பழக்குலையை இலை மறைத்தாலும்
பசித்திருக்கும் கிளி அறியாதா?

பாஞ்சாலி : மனதினிலே உள்ள மாருத ஆசை!
வாக்கினிலே வெளிப்படுதே!
மாங்கனி முன்னே ஆண்கிளி ஜம்பம்
செல்லாமல் இப்போது திண்டாடுதே

ராகவன் : அழகு விளையாட அமைதி உறவாட

பாஞ்சாலி : அருவி இசைபாட அழைத்திடுதே

ராகவன் : மாங்கனி நீயினி மறைந்து போக முடியுமா?

பாஞ்சாலி : வாதமேன் நாமினிப் பிரிந்து வாழ முடியுமா?

ராகவன் : கொஞ்சும் மொழியாலே இன்பம் கொண்டேனே

பாஞ்சாலி : அன்பு வலை வீசும் நெஞ்சைக் கண்டேனே

ராகவன் : அழகு விளையாட அமைதி உறவாட
அருவி இசைபாட அழைத்திடுதே.

— * —

## உதவியாளர்கள்

| | | |
|---|---|---|
| டைரக்ஷன் | ... | S. ராஜேந்திரன<br>P. ராதாகிருஷ்ணன |
| ஒளிப்பதிவு | ... | S. சிதம்பரம<br>மல்லான் |
| ஒலிப்பதிவு | ... | S. N. ஸ்ரீராமுலு<br>P. ராமசாமி |
| எடிட்டிங் | ... | E. அருணாசலம் |
| மேக்கப் | ... | A. கந்துபிள்ளை<br>S. சிததேஸ்வரன |
| ஆடை அலங்காரம் | ... | P. மாணிககம<br>S. V. அமுர்தலிங்கம் |
| புரொடக்ஷன் | ... | N. வீராசாமி |
| சங்கீதம் | ... | புகழேந்தி |
| ஆர்ட் & பெயிண்டிங் | ... | J. L. சிரில்<br>S. C. வெஙகட்ராமன் |
| செட்டிங்ஸ் | ... | V. குட்டி ஆசாரி |

ஸ்டூடியோ :

**ரத்னா, சேலம்.**

Record on R C A Sound System.

**இப்படத்தின் பாடல்களை எச். எம். வியிலும் கொலம்பியாவிலும் கேளுங்கள்.**

## நடிகர்கள்

இலங்கேஸ்வரன் மனோகர்
V. K. ராமசாமி
T. K. ராமச்சந்திரன்
R. பக்கிரிசாமி
T. V. சத்தியமூர்த்தி
S. S. சிவசூரியன்
S. ராமராவ்
ஸ்டண்ட் P. கிருஷ்ணன்
கரடிமுத்து
K. K. சௌந்தர்
C. K. சௌந்தரராஜன்
M. நடராஜன்

## நடிகைகள்

தேவிகா
L. விஜயலக்ஷ்மி
M. லக்ஷ்மிபிரபா
T. P. முத்துலக்ஷ்மி
M. S. தமிழரசி
E. R. சாந்தகுமாரி
சந்திரா

## பின்னணி பாடியவர்கள்

சீர்காழி கோவிந்தராஜன்
திருச்சி லோகநாதன்
S. C. கிருஷ்ணன்
A. L. ராகவன்
P. சுசீலா
ஜமுனாராணி
ராஜேஸ்வரி

ஸ்ரீ அம்பிகா பிரஸ், குகை, சேலம் போன் : 458.